பேரவை நேரம் வீணடிக்கப்பட்டது

எடப்பாடி கே.பழனிசாமி, பிரேமலதா பேட்டி

சென்னை, செப். 8: சட்டப்பேரவைக் கூட்டத்தில் மக்கள் பிரச்னைகள் பேசப்படாமல் நேரம் வீணடிக்கப்பட்டதாக அதிமுக பொதுச் செயலர் எடப்பாடி கே.பழனிசாமி, தேமுதிக பொதுச் செயலர் பிரேமலதா ஆகியோர் தெரிவித்தனர்.

பேரவைக் கூட்டத் தொடர் செவ்வாய்க்கிழமையுடன் நிறைவடைந்ததைத் தொடர்ந்து, பேரவை வளாகத்தில் செய்தியாளர்களிடம் எடப்பாடி கே.பழனிசாமி கூறியதாவது:

பேரவையில் நடைபெற்ற துறை ரீதியிலான மானியக் கோரிக்கை விவாதங்களின்போது திமுக, தவெக தரப்பில் பிரச்னைகள் ஏற்படுத்தப்படுவதால் மக்கள் பிரச்னைகளை முழுமையாகப் பேசமுடியாத நிலை ஏற்பட்டது. ஆளுங்கட்சியான தவெக தரப்பில் ஏதாவது ஒரு பிரச்னையைக் குறிப்பிட்டு எதிர்க் கட்சிகள் மீது குற்றம் சுமத்துகின்றனர். அதை எதிர்க் கட்சியாக உள்ள திமுகவினர் பதிலளிக்கிறோம் என எதிர்க்கின்றனர். இருவரும் மாறி மாறிப் பேசுவதால் அவையின் நேரம் வீணடிக்கப்பட்டது. பேரவைத் தலைவர் இரு தரப்பையும் சமரசப்படுத்தி அமரவைத்தாலும், அமைச்சர்கள் மீண்டும் மீண்டும் திமுக மீது குற்றம் சுமத்தி பிரச்னையை ஏற்படுத்தி, அதைப் பெருமையாகவும் கூறுகின்றனர். எனவே, பேரவையில் மக்கள் பிரச்னையைப் பேச வேண்டிய பொன்னான நேரம் வீணடிக்கப்படுகிறது.

ஆளுங் கட்சி, திமுக நடவடிக்கையால் அதிமுக போன்ற எதிர்க்கட்சிகள் மக்கள் பிரச்னைகளை பேரவையில் முன்னிலைப் படுத்தி பேசமுடியாத நிலை ஏற்பட்டது.

பல துறைகள் குறித்த கேள்விகளுக்கும் கூட குறிப்பிட்ட 3 அமைச்சர்கள் மட்டுமே பதிலளிக்கின்றனர். காவல் துறை மானியக் கோரிக்கையில் கூட எனது கேள்விக்கு முதல்வர் பதில் இல்லை. அந்தத் துறை காலிப்பணியிடங்கள் எப்போது நிரப்பப்படும் என்றுகூட தெரிவிக்கவில்லை. பண்டிகைக் கால சீட்டு மோசடி போன்றவற்றுக்கும் பதில் இல்லை. டெல்டா விவசாயிகள் நலனும் பாதுகாக்கப்படவில்லை என்றார்.

பிரேமலதா: பேரவையில் மக்கள் பிரச்னை குறித்து பேச கோரிக்கை விடுத்தால் பேரவைத் தலைவர் அனுமதி மறுக்கிறார். பழைய விஷயங்களைப் பேசி பேரவை நேரம் வீணடிக்கப்பட்டுள்ளது. மக்களுக்கு பயனில்லாத பேரவைக் கூட்டமாக நடந்து முடிந்துள்ளது. போக்குவரத்துத் துறை மேம்பாட்டில் அரசு கவனம் செலுத்தவில்லை. கிராமப்புற ஏழை மக்கள் அறிவு வளர்ச்சிக்கும், கல்வி முன்னேற்றத்துக்கும் தேவையான திட்டங்களை அரசு செயல்படுத்த வேண்டும் என்றார்.

தவெக ஆதரவுக் கட்சிகள் கூட்டத்தில் பங்கேற்கவில்லை

இடதுசாரிகள் அறிவிப்பு

சென்னை, செப். 8: சென்னையில் புதன்கிழமை (செப்.9) நடைபெறவுள்ள தவெக ஆதரவுக் கட்சிகளின் 2-ஆவது ஆலோசனை கூட்டத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சிகள் பங்கேற்கவில்லை எனத் தெரிவித்துள்ளன.

தவெக ஆதரவுக் கட்சிகள் பங்கேற்கும் 2-ஆவது ஆலோசனைக் கூட்டம் சென்னையில் புதன்கிழமை (செப்.9) நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில் பங்கேற்க வேண்டும் என தவெக அமைச்சர்கள் இடதுசாரி கட்சிகளின் மாநிலச் செயலர்களை நேரில் சந்தித்து அழைப்பு விடுத்தனர். அப்போது, கட்சியின் மாநிலக் குழு கூட்டத்தில் விவாதித்து முடிவு தெரிவிக்கப்படும் என தவெக அமைச்சர்களிடம் தெரிவிக்கப்பட்டது.

அதன்படி,, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக் குழு கூட்டம் சென்னை தியாகராய நகரில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இதைத் தொடர்ந்து, அந்தக் கட்சியன் மாநிலச் செயலர் பெ.சண்முகம் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

இடைத்தேர்தல், உள்ளாட்சித் தேர்தல், மக்களவைத் தேர்தல் குறித்துப் பேச தவெக தரப்பில் எங்களை அழைத்தனர். புதிய கூட்டணியை உருவாக்க வேண்டும் எனவும் கூறப்பட்டது. கட்சியின் மாநிலக் குழு கூட்ட முடிவின்படி தவெக ஆதரவுக் கட்சிகள் கூட்டத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி பங்கேற்காது. மக்கள் நலன் சார்ந்த பிரச்னைகள் குறித்து அரசுக்கு ஆலோசனைகளை வழங்குவோம்.

'மிசா வரலாறை அமைச்சர்கள் படிக்க வேண்டும்': காவல் துறை மானியக் கோரிக்கை பதிலுரையில் முதல்வர் சம்பந்தமில்லாமல் பேசியுள்ளார். நினைத்ததை எல்லாம் சட்டப்பேரவையில் பேசுவோம் என்ற முறையில் பேசுவதை நாங்கள் ஏற்கவில்லை. மிசா கைது பற்றி அமைச்சர் நிர்மல்குமார் பேசியது சிறுபிள்ளைத்தனமானது. மிசா சிறைக் கொடுமைகள் குறித்த வரலாற்றை தவெக அமைச்சர்கள் படிக்க வேண்டும் என்றார் அவர்.

இந்திய கம்யூனிஸ்ட்: இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக் குழுக் கூட்டம் சென்னை தியாகராய நகரில் உள்ள பாலன் இல்லத்தில் நடைபெற்றது. இதைத் தொடர்ந்து அந்தக் கட்சியின் மாநிலச் செயலர் மு.வீரபாண்டியன் செய்தியாளர்களிடம் கூறியதாவது: தவெக ஆதரவுக் கட்சிகள் கூட்டத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பங்கேற்காது. மேலும், மதச்சார்பின்மை நீடிக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன், வெளியில் இருந்து தவெக அரசுக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதரவு தொடரும் என்றார். தவெக ஆதரவுக் கட்சிகளின் முதலாவது கூட்டத்திலும் இவ்விரு கட்சிகளும் பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அரசுக்கு ஆதரவு தொடருமா?: உறுதியாகச் சொல்ல முடியாது

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலர் பெ.சண்முகம் கூறியதாவது: தவெக அரசுக்கு வெளியில் இருந்து எங்களது ஆதரவு தொடரும். அதேவேளையில், 5 ஆண்டுகள் ஆதரவு கொடுப்போம் என்பதை உறுதியாகச் சொல்ல முடியாது. தவெகவின் நிலைப்பாட்டை பொருத்து ஆதரவு அளிப்பது குறித்து முடிவெடுக்கப்படும் என்றார் பெ.சண்முகம்.

அரசுப் பேருந்துகளில் அவசர உதவி பொத்தான்

அமைச்சர் விஜய் தமிழன் பார்த்திபன் அறிவிப்பு

சென்னை, செப். 8: அரசுப் பேருந்து பயணிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், பேருந்துகளின் நிகழ்நேரக் கண்காணிப்பை மேம்படுத்தவும் ரூ.17.99 கோடியில் வாகன இருப்பிட கண்காணிப்பு கருவி மற்றும் அவசர உதவி பொத்தான்கள் பொருத்தப்படும் என்று போக்குவரத்துத் துறை அமைச்சர் விஜய் தமிழன் பார்த்திபன் தெரிவித்தார்.

அந்தத் துறையின் மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது அமைச்சர் வெளியிட்ட புதிய அறிவிப்புகள்:

- நிலுவையில் உள்ள 5,665 மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு வழக்குகளுக்கு ரூ.500.67 கோடியில் விரைவில் தீர்வு காணப்படும்.
- 35.03 ஏக்கர் பரப்பளவில் உள்ள பேருந்து பணிமனைகள் மூலம் ஆண்டுக்கு ரூ.124.28 கோடி பயணக் கட்டணமில்லா வருவாய் கிடைக்க பொது-தனியார் நவீன பயணிகள் வசதி மற்றும் வணிகப் பயன்பாடுகள் உருவாக்கப்படும்.
- சாலை விபத்துகள், உயிரிழப்புகளைத் தடுக்க 10,524 புறநகர் பேருந்துகளின் இருபுறங்களின் பக்கவாட்டு பாதுகாப்பு அரண்கள் ரூ.15.79 கோடியில் பொருத்தப்படும்.
- 10,717 பணிமனை தொழில்நுட்பப் பணியாளர்களுக்கு பிஎஸ்-6, சிஎன்ஜி, மின்சார பேருந்துகளின் பராமரிப்பு, பழுது கண்டறிதல் பயிற்சி அளிக்கப்படும்.
- பள்ளி நேரத்துக்கு ஏற்ப போக்குவரத்து வசதி இல்லாத கிராமப்புற, மலை, உட்புற பகுதிகளில் 140 பள்ளிகளைச் சேர்ந்த 19,000 மாணவர்கள் பயனடையும் வகையில் சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படும்.
- சிங்காரச் சென்னை தேசிய பொதுப் போக்குவரத்து அட்டை திட்டம் தமிழகம் முழுவதும் விரிவாக்கம் செய்யப்படும்.
- திண்ணை - சாலைப் பாதுகாப்பு தொடர்பான செயற்கைத் தள பயிற்சி அறிமுகம் செய்யப்படும்.

மாணவி கூட்டுப் பாலியல் வன்முறை: ஒருவருக்கு தூக்கு; இருவருக்கு சிறைத் தண்டனை

திருநெல்வேலி நீதிமன்றம் தீர்ப்பு

திருநெல்வேலி, செப். 8: திருநெல்வேலியில் பிளஸ் 2 மாணவியிடம் கூட்டு பாலியல் வன்முறையில் ஈடுபட்டது தொடர்பான வழக்கில், தொழிலாளிக்கு தூக்குத் தண்டனையும், இருவருக்கு சிறைத்தண்டனையும் விதித்து திருநெல்வேலி நீதிமன்றம் செவ்வாய்க்கிழமை தீர்ப்பளித்தது.

தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் பிள்ளையார் கோயில் தெருவைச் சேர்ந்த சுப்பிரமணியன் மகன் முனீஸ்வரன் (26). இவர், கடந்த 2022 ஆம் ஆண்டு திருநெல்வேலியில் உள்ள ஒரு தேவாலயத்திற்கு வர்ணம் பூசும் பணிக்கு வந்துள்ளார்.

அப்போது, அதே பகுதியைச் சேர்ந்த பிளஸ்-2 மாணவியிடம் பழகிய அவர், திருமணம் செய்வதாகக் கூறி மாணவியை அதே ஆண்டு அக்டோபர் மாதத்தில் திருநெல்வேலி சந்திப்பில் உள்ள காட்டுப் பகுதிக்கு அழைத்துச் சென்று பாலியல் வன்முறையில் ஈடுபட்டாராம்.

அப்போது, அங்கு மறைந்திருந்த 2 பேர் கைப்பேசியில் மாணவியை ஆபாசமாக புகைப்படம் எடுத்துவைத்து மிரட்டி, பாலியல் வன்முறையில் ஈடுபட்டனராம்.

இதுகுறித்து மாணவியின் உறவினர் பாளையங்கோட்டை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார்.

அதன்பேரில், போலீஸார் விசாரணை நடத்தி, கொக்கிரகுளத்தைச் சேர்ந்த முத்துக்கிருஷ்ணன் மகன் சின்னக்குட்டி (28), கணேசன் மகன் முருகேசன் (23) ஆகியோரையும், முனீஸ்வரனையும் போக்ஸோவில் கைது செய்தனர்.

திருநெல்வேலி மாவட்ட போக்ஸோ சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த இவ்வழக்கை நீதிபதி சுரேஷ்குமார் விசாரித்து, 3 பேரும் குற்றவாளிகள் என கடந்த 3ஆம் தேதி தீர்ப்பளித்தார். தண்டனை விவரங்கள் செவ்வாய்க்கிழமை (செப்.8) அறிவிக்கப்படும் என்று தெரிவித்திருந்தார்.

அதன்படி, நீதிபதி அளித்த தீர்ப்பில் சின்னக்குட்டிக்கு தூக்குத் தண்டனை, ரூ.12 ஆயிரம் அபராதம், முருகேசனுக்கு 20 ஆண்டுகள் சிறைத் தண்டனை, ரூ.10 ஆயிரம் அபராதம், முனீஸ்வரனுக்கு 13 ஆண்டுகள் சிறைத்தண்டனை, ரூ.10 ஆயிரம் அபராதம் விதிக்கப்பட்டது.

மேலும், பாதிக்கப்பட்ட மாணவியின் குடும்பத்திற்கு அரசு இழப்பீடாக ரூ.10 லட்சம் வழங்கவும் உத்தரவிடப்பட்டது.

வடகிழக்கு ரயில்வே

திருத்தம்

இணையத்தளம்: www.ner.indianrailways.gov.in
நாள்: 07.09.2026

பின்வருவன தொடர்புடைய கீழே குறிப்பிடப்பட்டுள்ள திருத்தம் இதன் மூலம் செய்யப்படுகிறது. டெண்டர் எண் 22262361 கடைசி நாள் 17.09.2026 & டெண்டர் அறிவிப்பு எண். 10, நாள் 02.09.2026 (இனம் எண். 24) **இனம் எண்.: 24. இன விபரம்:** டெண்டர் திறப்பு நாள் மற்றும் நேரம்: **கொடுக்கப்பட்டது** : 17.09.2026 நேரம் முற்பகல் 11.30 மணி **திருத்தப்பட்டுள்ளது** : 14.10.2026 நேரம் முற்பகல் 11.30 மணி **விபரங்களை IREPS வலைத்தளத்தில் காணலாம்.** மற்ற எந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளில் எவ்வித மாற்றங்களும் இல்லை. **குறிப்பு:** வடகிழக்கு ரயில்வே இணையத்தளம் www.ner.indianrailways.gov.in & இந்திய அரசு இணையத்தளம் www.tenders.gov.in ஆகியவற்றில் மேற்படி தகவலைக் காணலாம்.

பொருள்களுக்கான தலைமை முதன்மை மேலாளர்,
CPRO/S-57 **கோரக்பூர்**

ரயில்களில் பீடி / சிகரட் புகைக்க வேண்டாம்

மாண்புமிகு கடன் வசூல் தீர்ப்பாயம்-III, சென்னை முன்பாக
6வது தளம், கூடுதல் அலுவலக கட்டிடம்,
சாஸ்திரி பவன், ஹாடோஸ் சாலை,
சென்னை - 600 006

அசல் விண்ணப்ப எண். 58 / 2025

பெகாசஸ் அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட்,
அதன் டிரஸ்டியாக செயல்படும் பெகாசஸ் குரூப் 39 டிரஸ்ட்-1 ... **மனுதாரர்**
- எதிரிடை-
ஸ்பென்சர் டிராவல் சர்வீசஸ் லிமிடெட்,
பிரதிநிதியாக அதன் இயக்குநர்
திருமதி.கீதா ஜார்ஜ் & 2 பிறநபர்கள் ... **எதிர்மனுதாரர்கள்**

பெறுநர்
1. **கீதா ஜார்ஜ் .J - D2,**
க/பெ. ஜார்ஜ் ஜேக்கப்
எண்.25, ஈஷா சிக்னேசர் வில்லாஸ்,
ஏரிக்கரை சாலை, வீராத்தம்மன் கோவில் தெரு, ஜல்லடியன்பேட்டை,
புனித ஜான்ஸ் பள்ளி அடுத்து
சென்னை - 600 100.
2. **ஜார்ஜ் ஜேக்கப் - D3,**
த/பெ ஜேக்கப் சாக்கோ,
எண்.25, ஈஷா சிக்னேசர் வில்லாஸ்,
ஏரிக்கரை சாலை, வீராத்தம்மன் கோவில் தெரு, ஜல்லடியன்பேட்டை,
புனித ஜான்ஸ் பள்ளி அடுத்து
சென்னை - 600 100.

ஐயா / அம்மையீர்,

மேற்குறிப்பிட்டுள்ள மனுதாரர் தங்கள் அனைவருக்கும் எதிராக **08.04.2024** அன்று வரை **ரூ.1,19,74,154.49 (ரூபாய் ஒரு கோடியே பத்தொன்பது லட்சத்து எழுபத்து நான்காயிரத்து நூற்று ஐம்பத்து நான்கு மற்றும் பைசா நாற்பத்து ஒன்பது மட்டும்)** தொகையை வசூல் செய்வதற்காக மேற்குறிப்பிட்ட அசல் விண்ணப்பத்தை தாக்கல் செய்துள்ளார். மாண்புமிகு முன்னிலை அதிகாரி, கடன் வசூல் தீர்ப்பாயம் - III சென்னை அவர்கள் தங்கள் இருவருக்கும் **18.11.2026** அன்று ஆஜராவதற்காக புதிய அறிவிப்பை நாளிதழ்களின் வாயிலாக வெளியிடுவதற்கு உத்தரவிட்டுள்ளார்.

எனவே தாங்கள் இருவரும் நேரடியாகவோ அல்லது தங்களது வழக்கறிஞர் மூலமாகவோ மாண்புமிகு கடன் வசூல் தீர்ப்பாயம் -III, சென்னை, 6வது தளம், கூடுதல் அலுவலக கட்டிடம், சாஸ்திரி பவன், ஹாடோஸ் சாலை, சென்னை - 600 006 முன்பாக **18.11.2026 அன்று காலை 11.00 மணிக்கு** ஆஜராவதற்கு இந்த அறிவிப்பு வெளியிடப்படுகிறது. தவறும் பட்சத்தில் மேற்குறிப்பிட்ட அசல் விண்ணப்பம் தாங்கள் இல்லாமலேயே வழக்கு விசாரிக்கப்பட்டு தீர்மானிக்கப்படும்.

M/s. ராமலிங்கம் & அசோசியேட்ஸ்
வழக்கறிஞர்கள்
மனுதாரரின் வழக்கறிஞர்
எண்.321 (பழைய எண்.155), 2வது தளம்,
தம்பு செட்டி தெரு, சென்னை - 600 001.

CSB Bank
Trusted Heritage Smart Future

அடமானம் வைக்கப்பட்ட தங்க ஆபரணங்களின் ஏலம் குறித்த பொது அறிவிப்பு

[illegible] **2026 செப்டம்பர் 22 ஆம் தேதி காலை 10.30** [illegible]

[illegible]	[illegible] CSB கிளை	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]
1	[illegible]	[illegible]	10263763	002	41,88,696.79	351.30
2	தி நகர்	[illegible]	10090554	001	55,06,763.63	482.20
3	தி நகர்	கல்யாணி B	10002591	003	36,58,361.85	330.80
4	தி நகர்	பார்த்திபன் M	10017614	001	40,34,543.53	340.50
5	அண்ணா நகர்	[illegible]	04014537	001	96,37,283.00	830.80
6	அண்ணா நகர்	சலீம் பாஷா	07773140	001	96,33,234.06	831.70
7	அண்ணா நகர்	[illegible]	10114701	001	18,00,224.91	152.80
8	அண்ணா நகர்	சத்யநாராயணன்	07798363	001	59,00,962.38	496.00
9	அண்ணா நகர்	[illegible]	04014532	003	1,02,63,563.44	889.60
10	[illegible]	[illegible]	10254825	001	75,95,793.30	650.30
11	அமைந்தக்கரை	கார்த்திக் முனியசாமி	06280913	001	7,71,395.26	66.50
12	அமைந்தக்கரை	ராஜ்குமார்	10172208	001	28,01,260.20	239.80

[illegible]

தமிழ்நாடு | 09.09.2026 ஒப்/- அங்கீகரிக்கப்பட்ட அலுவலர், CSB வங்கி

இந்தியன் வங்கி

ஒடுக்கப்பட்ட சொத்துக்கள் மேலாண்மை கிளை - சென்னை
55, எத்திராஜ் சாலை, மண்டல அலுவலகம் கட்டிடம் II தளம், வெல்லிங்டன் எஸ்டேட், எழும்பூர், சென்னை - 600 008. தொலைபேசி : 044-28216711.
மின்னஞ்சல் : armb2chennai@indianbank.bank.in

பிற்சேர்க்கை IV-A [விதி 8(6) நிபந்தனை பார்க்கவும்]

அசையா சொத்துக்களுக்கான விற்பனை அறிவிப்பு

2002-ஆம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க விதிகள் உடன் வாசிக்கவேண்டிய கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்கம்) விதி 9(1)-ல் வழங்கப்பட்டுள்ள நிபந்தனைகளின்படியான மின்னணு ஏல அறிவிப்பு (E-auction)

இதன் மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்)-க்கு குறிப்பாகவும் அறிவிக்கப்படுவது யாதெனில் ஈட்டு கடனாளருக்கு அளிக்கப்பட்டுள்ள, கீழே விவரிக்கப்பட்டுள்ள அடமான/பிணைய சொத்துக்களை ஈட்டுக் கடனாளரான இந்தியன் வங்கி, வளசரவாக்கம் கிளையின் (தற்போது SAM பெரிய கிளை, சென்னைக்கு மாற்றப்பட்டுள்ளது) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள் **மெய்நிலை** சுவாதீனம் எடுத்து கொண்டதையடுத்து, கடன் நிலுவைத்தொகையான **ரூ.5,96,74,054.79 (ரூபாய் ஐந்து கோடியே தொண்ணூற்று ஆறு லட்சத்து எழுபத்து நான்காயிரத்து ஐம்பத்து நான்கு மற்றும் பைசா எழுபத்து ஒன்பது மட்டும்) (04.09.2026-ன்படி)** மேலும் 05.09.2026 தேதி முதல் மேலதிக வட்டி, செலவுகள் மற்றும் பிற கட்டணங்களுடன் சேர்த்து வசூலிப்பதற்காக, **"எங்கு உள்ளதோ அங்கு அப்படியே", "எப்படி உள்ளதோ அப்படியே" மற்றும் "எப்படியிருந்தாலும் அப்படியே"** என்ற அடிப்படையில், ஈட்டுக் கடனாளரான இந்தியன் வங்கி, வளசரவாக்கம் கிளையால் (தற்போது SAM பெரிய கிளை, சென்னைக்கு மாற்றப்பட்டுள்ளது) கீழே குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்கள் **24.09.2026** அன்று விற்பனை செய்யப்பட உள்ளது.

கடன்தாரர் / ஜாமீன்தாரர்களின் பெயர் மற்றும் முகவரி **(1) M/s. Labtech Electronics Pvt. Ltd., (கடன்தாரர்),** 1/3, பெரியபணிச்சேரி, போரூர்-குன்றத்தூர் மெயின் ரோடு, சென்னை - 602 122. **மேலும் இருப்பது :** TS 69A, SIDCO இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் (கிண்டி), ஈக்காட்டுதாங்கல், சென்னை - 600 032. **(2) திரு. C. செல்வகுமாரசாமி, (M/s.Labtech Electronics Pvt. Ltd.-ன் இயக்குனர்/ஜாமீன்தாரர்/அடமானதாரர்),** த/பெ N. சின்னசாமி, எண்.220, 42வது தெரு, 8வது செக்டார், K K நகர், சென்னை - 600 078. **மேலும் இருப்பது :** எண்.255A, 42வது தெரு, 8வது செக்டார், K K நகர், சென்னை - 600 078. **மேலும் இருப்பது :** 5A, செல்வி அம்மன் நகர், வேளச்சேரி, சென்னை - 600 042. **(3) திருமதி. S. முத்துலட்சுமி, (நிர்வாக இயக்குனர்),** க/பெ C. செல்வகுமாரசாமி, (M/s.Labtech Electronics Pvt. Ltd.-ன் இயக்குனர்/ஜாமீன்தாரர்/அடமானதாரர்), எண்.220, 42வது தெரு, 8வது செக்டார், K K நகர், சென்னை - 600 078. **மேலும் இருப்பது :** எண்.214, 42வது தெரு, 8வது செக்டார், ஜெஸ்லியோ அப்பார்ட்மெண்ட், K K நகர், சென்னை - 600 078. **(4) திருமதி. B வசந்தா, (M/s.Labtech Electronics Pvt. Ltd.-ன் இயக்குனர்/ ஜாமீன்தாரர்),** க/பெ K. போஸ், எண்.220, 42வது தெரு, 8வது செக்டார், K K நகர், சென்னை - 600 078. **மேலும் இருப்பது :** எண்.51, சேஷாலம் தெரு, சைதாப்பேட்டை, சென்னை - 600 015.

சொத்தின் சுருக்கமான விவரம் மின்னணு ஏல முறையில் விற்பனைக்கு கொண்டுவரப்படவுள்ள சொத்தின் முக்கிய விவரங்கள் பின்வருமாறு :

ச. எண்.98/12B, பட்டா எண்.123, பெரியபணிச்சேரி கிராமம், ஸ்ரீபெரும்புதூர் தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள 10.00 சென்ட்டுகள் (4362.5 சதுர அடி) பரப்பளவு கொண்ட தொழிற்சாலை நிலம் மற்றும் கட்டிடம் கொண்ட சொத்தின் அனைத்து துண்டுகளும் பகுதிகளும். இது திருமதி. S. முத்துலட்சுமி, நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் அவர்களுக்கு சொந்தமான சொத்து. இது பம்மல் துணை பதிவு மாவட்டம் மற்றும் சென்னை தெற்கு பதிவு மாவட்டத்திற்குள் அமைந்துள்ளது.

வங்கிக்கு தெரிந்தவரை உள்ள முந்தைய வில்லங்கம் : அறியப்படவில்லை. சொத்து ID எண். : IDIB6160337200B

ரிசர்வ் விலை : ரூ.298.32 லட்சங்கள் | **ஏல அதிகரிப்பு தொகை : ரூ.1,00,000/-** | **EMD : ரூ.29.83 லட்சங்கள்**

வங்கி இணையதளம் | மின்னணு ஏல இணையதளம் | விற்பனை அறிவிப்பு | சொத்தின் இருப்பிடம் | சொத்தின் புகைப்படம்

சொத்துக்கள் மற்றும் அதன் தொடர்பான ஆவணங்களின் ஆய்வு தேதி மற்றும் நேரம் :
17.09.2026 - 18.09.2026 அன்று காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை

மின்னணு ஏல தேதி மற்றும் நேரம் : 24.09.2026 முற்பகல் 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை

டெண்டர் படிவம்/EMD சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி : 24.09.2026

ஏலதாரர்கள் ஆன்லைன் ஏலத்தில் பங்கேற்பதற்கு எங்களது மின்னணு ஏல சேவை வழங்குநர் PSB அலையன்ஸ் பி. லிட்.-ன் இணையதளத்தை (https://www.baanknet.com) பார்வையிடுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். தொழில்நுட்ப உதவிக்கு PSB அலையன்ஸ் பி. லிட். உதவி மைய எண்.8291220220, மின்னஞ்சல் :- support.baanknet@psballiance.com மற்றும் சேவை வழங்குநரின் உதவி மையத்தில் உள்ள பிற உதவி எண்களுக்கு அழைக்கவும். PSB அலையன்ஸ் பி. லிட். உடன் ஆன பதிவு நிலை மற்றும் EMD நிலை பற்றி அறிய, தயவுசெய்து support.baanknet@psballiance.com தொடர்பு கொள்ளவும்.
சொத்து விவரங்கள் மற்றும் சொத்தின் புகைப்படம் மற்றும் ஏல விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு https://www.baanknet.com பார்வையிடவும் மற்றும் இந்த போர்ட்டல் தொடர்பான விவரங்களுக்கு தயவுசெய்து உதவிமைய எண்.8291220220 தொடர்பு கொள்ளவும்.
ஏலதாரர்கள் https://www.baanknet.com இணையதளத்தில் உள்ள சொத்து தேடுதலின்போது, மேலே குறிப்பிட்டுள்ள **சொத்து ID எண்ணைப் பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.**

தேதி : 05.09.2026 **அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,**
இடம் : சென்னை **இந்தியன் வங்கி.**

equitas SMALL FINANCE BANK

எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்
(Formerly Known as Equitas Finance Ltd)
பதிவு அலுவலகம்: எண்.769, ஸ்பென்சர் பிளாசா, 4வது தளம், பேஸ் II, அண்ணாசாலை,
சென்னை, தமிழ்நாடு - 600002 போன் : 044-42995000, 42995050,

அசையா சொத்துக்கள் விற்பதற்கான விற்பனை அறிவிப்பு

பிற்சேர்க்கை IV - A யின்படி (விதி 8 (6) யை பார்க்கவும்) - அசையா சொத்துக்கள் விற்பதற்கான விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8 (6) உடன் கீழ் அசையா சொத்துக்களின் விற்பனைக்கான மின்-ஏல விற்பனை அறிவிப்பின் மூலம் கடன்தாரர்(கள்), அடமானதாரர்(கள்), ஜாமீன்தாரர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பில் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களை எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட் வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் சுவாதீனம் செய்யப்பட்ட கீழே உள்ள சொத்துக்கள் **"எங்கு உள்ளதோ அப்படியே" "எப்படி உள்ளதோ அப்படியே" மற்றும் "என்ன இருக்கிறதோ அதே நிலையில்"** என்ற அடிப்படையில் வங்கியில் பெறப்பட்ட கடனுக்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன் மற்றும் செலவுகளை திரும்பப் பெறும் நோக்கத்துடன் மின் ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர்(கள்), அடமானதாரர்(கள்), ஜாமீன்தாரர்(கள்) நிர்ணய விலை, டேவணித் தொகை, ஏல உயர்வு தொகை, மின்-ஏல தேதி மற்றும் நேரம் ஆகிய விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

கடன்தாரர்கள் / அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்கள் பெயர் & முகவரி	அசையா சொத்துக்களின் விவரங்கள் மற்றும் வங்கிக்கு தெரிந்தவரை வில்லங்கள் ஏதேனும் இருப்பின்	நிர்ணய விலை, டேவணித் தொகை, ஏல உயர்வுத் தொகை	மின் ஏல விற்பனைக்கான தேதி மற்றும் நேரம்	கடன் / மொத்த நிலுவைத் தொகை
திரு. மகாலிங்கம் N C/O திரு. நடேசன் திருமதி. சகுந்தலா M C/o திரு. மகாலிங்கம் இருவரின் முகவரி : எண் 4/714 திருவள்ளுவர் செயின்ட், ஸ்ரீகாளிகாபுரம், திருவள்ளூர், தமிழ்நாடு, 631302	திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டம், ஸ்ரீகாளிகாபுரம் கிராமத்தின் சர்வே எண் 256/1Aல் அமைந்துள்ள, 833 சதுர அடி பரப்பளவு நிலம் மற்றும் கட்டிடம். இதன் எல்லைகள்: வடக்கு பாதை; தெற்கு திரு. குப்பன் அவர்களுக்குச் சொந்தமான நிலம்; கிழக்கு திருமதி. ராணி அவர்களுக்குச் சொந்தமான நிலம்; மேற்கு திருமதி. ஈஸ்வரி அவர்களுக்குச் சொந்தமான நிலம்.	ரூ.10,80,000/- ரூ.1,08,000/- ரூ.10,000/-	15.10.2026 அன்று காலை 11.00 மணி முதல் மதியம் 12.30 வரை	கடன் கணக்கு எண். SEARKNM0282507 / 600000029710 17.04.2026 அன்றுள்ளபடி கோரிக்கை நிலுவைத் தொகை ரூ.11,25,978/- மேலும் 18.04.2026 அன்று முதல் மாதாந்திர எதிர்கால வட்டி, கட்டணங்கள், செலவீனங்கள் மற்றும் பிற. (26.08.2026 அன்றுள்ளபடி மொத்த நிலுவைத் தொகை ரூ.12,35,943/-

சொத்தினை வாங்குபவர் மற்றும் விற்பனை விவரங்களை பற்றிய ஏதேனும் கேள்விகளுக்கு தொடர்பு கொள்ளவும்:
சதீஷ் 9940286237, பூபாலன் E 8608578142, கார்த்திக் குமார் A 8939729580

விருப்பமுள்ள வாங்குபவர்/ஏலதாரர்கள் மூலம் (EMD) முன்வைப்புத் தொகையினை, தேசியமயமாக்கப்பட்ட அல்லது பட்டியலில் உள்ள ஏதேனும் வங்கியின் NEFT/RTGS/DD மூலமாக "Equitas Small Finance Bank Ltd", கணக்கு எண்.200000807725 மற்றும் IFSC Code- ESFB0001001, Bhaggyam Galleria, New No.18, Bazulla Road, T. Nagar, Chennai - 600 017 என்ற பெயரில் உள்ள கணக்கில் செலுத்தி 14.10.2026 அன்றோ அல்லது அதற்கு முன்போ சமர்ப்பிக்க வேண்டும்.

மின் ஏல விற்பனைக்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை www. Equitasbank.in & https://www.bankeauctions.com என்ற இணையதளம் மூலம் காணலாம்.

IDBI BANK **ஐடிபிஐ வங்கி லிமிடெட்**
CIN - L65190MH2004GOI148838
எண் 115, அண்ணாசாலை, சைதாப்பேட்டை, Post Bag எண்.805, சென்னை 600015. Ph: 044-22202261 /22202092 . Website: www.idbi.bank.in

(சுவாதீன அறிவிப்பு (அசையாச் சொத்துக்கானது)) [விதி 8(1)]

பிணைக்காப்பு நிதிச் சொத்து மறு சீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்கச் சட்டம், 2002 (SARFAESI சட்டம்) மற்றும் பிணைக்காப்பு (செயலாக்க) விதிகள் 2002ன் கீழ் அதிகாரம் பெற்ற அதிகாரியாக நியமிக்கப்பட்டவரான கீழே கையொப்பமிட்ட **ஐடிபிஐ வங்கி லிமிடெட்**-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் 13(12) பிரிவு மற்றும் விதி 3ன் படி **18.06.2026** தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பில் **(Demand Notice)** குறிப்பிடப்பட்ட **கடன்தாரர்: திருமதி. செல்லதுரை சோபியா,** முகவரி: எண்.4-37, முதல் தளம், இலட்சுமிபுரம், சென்னை - 600026 & திரு. ஆறுமுகம் செல்லதுரை, எண்.4-37, முதல் தளம், இலட்சுமிபுரம், சென்னை - 600026 ஆகியோர்களுக்கு **10.05.2026** அன்றுள்ளபடி கடன்பாக்கித் தொகையான **ரூ.42,13,321.00** (ரூபாய் நாற்பத்து இரண்டு இலட்சத்து பதிமூன்று ஆயிரத்து முன்னூற்று இருபத்து ஒன்று மட்டும்) மேலும் **10.06.2026** அன்று முதல் அதன் மீதான எதிர்கால வட்டி மற்றும் இதர செலவினங்கள் சேர்த்து இந்த அறிவிப்பு பெற்ற **60 நாட்களுக்குள்** திரும்ப செலுத்த வேண்டுமென்று கூறப்பட்டது.

கடன்தாரர் மற்றும் அடமானதாரர்கள் வங்கிக்கு செலுத்த வேண்டிய கடன்தொகையை திரும்ப செலுத்த தவறியதால், கடன்தாரர் மற்றும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் இதன் மூலம் அறிவிப்பதாவது கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தினை 2002ம் ஆண்டு SARFAESI சட்டம் பிரிவு 13(4)ன் விதிகள் 2002 இன் 8 (1) ன் கீழும் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படியும் மற்றும் அதற்கு தொடர்புடைய மேற்சொன்ன விதியின் படியும், கீழே கையொப்பமிட்டுள்ள அதிகாரி தமக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தினை **05.09.2026** அன்று சுவாதீனம் செய்துள்ளார்.

கடன்தாரர் மற்றும் அடமானதாரர்களுக்கு குறிப்பாகவும் மற்றும் பொது மக்களுக்கு பொதுவாகவும் இதன் மூலம் எச்சரிக்கப்படுவது யாதெனில் சுவாதீனமான சொத்தின் விஷயத்தில் எவரும் எவ்வித பேரமும் வைத்துக்கொள்ளக் கூடாது மீறி வைத்துக் கொண்டால் அது **ஐடிபிஐ வங்கி லிமிடெட்-க்கு** செலுத்த வேண்டிய **10.06.2026** அன்றுள்ளபடி கடன்பாக்கித் தொகையான **ரூ.42,41,805/-** (ரூபாய் நாற்பத்து இரண்டு இலட்சத்து நாற்பத்து ஓர் ஆயிரத்து எண்ணூற்று ஐந்து மட்டும்) மேலும் அதன் மீதான எதிர்கால வட்டி சேர்த்து செலுத்துவதற்கு கட்டுப்பட்டதாகும்.

கடனுக்கு ஈடாக அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்துக்களை மீட்பதற்குரிய கால வரம்பு குறித்து சட்ட பிரிவு 13(8) ஷரத்துக்களின்படி கடன்தாரர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

சொத்தின் விளக்கம்

முன்னர் தென் சென்னை தற்போது தாம்பரம் பதிவு மாவட்டம் மற்றும் கூடுவாஞ்சேரி சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, காஞ்சிபுரம் மாவட்டம், முன்னர் ஸ்ரீபெரும்புதூர் வட்டம், தற்போது குன்றத்தூர் வட்டம், எண்.190, ஆதனூர் கிராமத்தின் பழைய சர்வே எண்.28/2A & 28/2B, பட்டா எண்.7967 இன்படி புதிய சர்வே எண்.28/10 & பழைய சர்வே எண்.28/11 தற்போது புதிய சர்வே எண்.28/11A ஆகியவைகளில் அடங்கிய (அங்கீகார எண்.115/2006) இன்படி அங்கீகாரம்பெற்ற மனைப்பிரிவு "ஸ்ரீ காயத்ரி கூட்டுறவு மெகா நகர்", 10.08.2023 தேதியிட்ட துணைப்பிரிவாக்கப்பட்ட அங்கீகார எண் Na.Ka. எண்.1737/2023/A4 இன்படி மனை எண்.578A இன் பரப்பளவு 1579சதுர அடி மற்றும் பாதையின் பரப்பளவு 285சதுர அடி, மொத்தப்பரப்பளவு 1864சதுர அடி விஸ்தீரணங்கொண்ட நிலம் காலி வீட்டு மனை அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி, பின்வருமாறு நிலத்தின் எல்லைகள்: கிழக்கில்: துணைப்பிரிவாக்கப்பட்ட மனை எண்.578A; வடக்கு மேற்கில் : காலி நிலம்; தெற்கில் : மனை எண்.577 & 576; 10அடி பாதையின் எல்லைகள்: வடக்கில்: துணைப்பிரிவாக்கப்பட்ட மனை எண்.578B; தெற்கில்: மனை எண்கள்.577 & 576; கிழக்கில்: 23அடி சாலை; மேற்கில்: துணைப்பிரிவாக்கப்பட்ட மனை எண்.578A; அனைத்தின் கூட்டுப்பரப்பளவு 1579சதுர அடி விஸ்தீரணங்கொண்ட துணைப்பிரிவாக்கப்பட்ட மனை எண்.578A & பரப்பளவு 285சதுர அடி விஸ்தீரணங்கொண்ட பாதை, மொத்தப் பரப்பளவு 1864சதுர அடி விஸ்தீரணம். அவற்றின் மீதுள்ள தற்போதைய மற்றும் எதிர்காலக் கட்டுமானங்கள் மற்றும் அமைப்புகள் அனைத்தும் உட்பட. **திருமதி. செல்லதுரை சோபியா அவர்களுக்குச் சொந்தமான அடமானம் வைக்கப்பட்டச் சொத்து.**

தேதி: 05.09.2026 அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
இடம்: சென்னை ஐடிபிஐ வங்கி லிமிடெட்

IDBI BANK **ஐடிபிஐ வங்கி லிமிடெட்**
CIN - L65190MH2004GOI148838
எண் 115, அண்ணாசாலை, சைதாப்பேட்டை, Post Bag எண்.805, சென்னை 600015. Ph: 044-22202261 /22202092 . Website: www.idbi.bank.in

(சுவாதீன அறிவிப்பு (அசையாச் சொத்துக்கானது)) [விதி 8(1)]

பிணைக்காப்பு நிதிச் சொத்து மறு சீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்கச் சட்டம், 2002 (SARFAESI சட்டம்) மற்றும் பிணைக்காப்பு (செயலாக்க) விதிகள் 2002ன் கீழ் அதிகாரம் பெற்ற அதிகாரியாக நியமிக்கப்பட்டவரான கீழே கையொப்பமிட்ட **ஐடிபிஐ வங்கி லிமிடெட்**-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் 13(12) பிரிவு மற்றும் விதி 3ன் படி **18.06.2026** தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பில் **(Demand Notice)** குறிப்பிடப்பட்ட **கடன்தாரர்: திரு. பிரகாஷ் செல்வநாயகம்** முகவரி: எண்.42/60, K தேசர்பட்டி, கிருஷ்ணாபுரம், செஞ்சி வட்டம், விழுப்புரம், தமிழ்நாடு - 604202 ஆகியோர்களுக்கு **12.05.2026** அன்றுள்ளபடி கடன்பாக்கித் தொகையான **ரூ.18,01,819.22/- (ரூபாய் பதினெட்டு லட்சத்து ஓர் ஆயிரத்து எண்ணூற்று பத்தொன்பது மற்றும் பைசா இருபத்து இரண்டு மட்டும்)** மேலும் **10.06.2026** அன்று முதல் அதன் மீதான எதிர்கால வட்டி மற்றும் இதர செலவினங்கள் சேர்த்து இந்த அறிவிப்பு பெற்ற **60 நாட்களுக்குள்** திரும்ப செலுத்த வேண்டுமென்று கூறப்பட்டது.

கடன்தாரர் மற்றும் அடமானதாரர்கள் வங்கிக்கு செலுத்த வேண்டிய கடன்தொகையை திரும்ப செலுத்த தவறியதால், கடன்தாரர் மற்றும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் இதன் மூலம் அறிவிப்பதாவது கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தினை 2002ம் ஆண்டு SARFAESI சட்டம் பிரிவு 13(4)ன் விதிகள் 2002 இன் 8 (1) ன் கீழும் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படியும் மற்றும் அதற்கு தொடர்புடைய மேற்சொன்ன விதியின் படியும், கீழே கையொப்பமிட்டுள்ள அதிகாரி தமக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தினை **05.09.2026** அன்று சுவாதீனம் செய்துள்ளார்.

கடன்தாரர் மற்றும் அடமானதாரர்களுக்கு குறிப்பாகவும் மற்றும் பொது மக்களுக்கு பொதுவாகவும் இதன் மூலம் எச்சரிக்கப்படுவது யாதெனில் சுவாதீனமான சொத்தின் விஷயத்தில் எவரும் எவ்வித பேரமும் வைத்துக்கொள்ளக் கூடாது மீறி வைத்துக் கொண்டால் அது **ஐடிபிஐ வங்கி லிமிடெட்-க்கு** செலுத்த வேண்டிய **10.06.2026** அன்றுள்ளபடி கடன்பாக்கித் தொகையான **ரூ.18,15,214.22/- (ரூபாய் பதினெட்டு லட்சத்து பதினைந்து ஆயிரத்து இருநூற்று பதினான்கு மற்றும் பைசா இருபத்து இரண்டு மட்டும்)** மேலும் அதன் மீதான எதிர்கால வட்டி சேர்த்து செலுத்துவதற்கு கட்டுப்பட்டதாகும்.

கடனுக்கு ஈடாக அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்துக்களை மீட்பதற்குரிய கால வரம்பு குறித்து சட்ட பிரிவு 13(8) ஷரத்துக்களின்படி கடன்தாரர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

சொத்தின் விளக்கம்

தாம்பரம் பதிவு மாவட்டம் மற்றும் கூடுவாஞ்சேரி சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் வட்டம், எண்.196, காவனூர் கிராமத்தின் பட்டா எண்.5271 சர்வே எண்.220/2 இல் அடங்கிய, 08.11.2024 தேதியிட்ட முறைப்படுத்தப்பட்டதின்படி Mu.Mu. எண்.6525/2024/B4 மற்றும் Mu.Mu. எண்.6524/2024/B4 மற்றும் 16.11.2024 தேதியிட்ட மனையின் துணைப்பிரிவு அங்கீகார எண்.Ka.No.29/2024-25 இன்படி அங்கீகாரம்பெற்ற மனைப்பிரிவு "செல்வி நகர் அனெக்ஸ்-II", மனை எண்.4 இன் மொத்தப் பரப்பளவு 1140சதுர அடி விஸ்தீரணங்கொண்ட நிலம் காலி வீட்டு மனை அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி, பின்வருமாறு எல்லைகள்: கிழக்கில்: சர்வே எண்.226; மேற்கில்: மனை எண்.3; தெற்கில்: மனை எண்.5; வடக்கில்: தற்போதுள்ள சாலை; **நாற்பரப்புகள் :** கிழக்குமேற்காக வடபுறம் : 23அடி 0அங்குலங்கள்; தென்புறம் : 20அடி 0அங்குலங்கள், வடக்குத்தெற்காக கிழக்கு புறம் :53அடி 0அங்குலங்கள்; மேற்குபுறம் : 53அடி 0அங்குலங்கள்; அனைத்தின் கூட்டுப்பரப்பளவு **1140சதுர அடி** விஸ்தீரணம். இந்த சொத்த காஞ்சிபுரம் மாவட்டம் மற்றும் குன்றத்தூர் வட்டத்தின் எல்லைகளுக்குட்பட்டது. **திரு. பிரகாஷ் செல்வநாயகம் அவர்களுக்குச் சொந்தமான அடமானம் வைக்கப்பட்டச் சொத்து.**

தேதி: 05.09.2026 அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
இடம்: சென்னை ஐடிபிஐ வங்கி லிமிடெட்

வரி விளம்பரம்

PUBLIC NOTICE

CHANGE OF NAME

CHANGE OF NAME

I, **Uma Maheswari**, daughter of Thiru S Palvannan, born on 15th June 1970 (District of Birth: Kanyakumari), residing at No. 59, S.S. Mercy Apartment, 10th Street, Shankar Nagar, Pammal, Chennai-600 075, shall henceforth be known as **P UMA MAHESWARI**.
Chennai, 23rd January 2026. UMA MAHESWARI

CHANGE OF NAME

My daughter, **Beaula Catharine**, born on 22nd October 2008 (District of Birth: Chennai), residing at No. 1/115, Seetha Lakshmi Street, Gowrivakkam, Chennai-600 073, shall henceforth be known as **BEAULA CATHARINE SELVARAJ.**
Chennai, 9th July 2024.
SELVARAJ A(Father)

CHANGE OF NAME

My son, **S. Allen Thomas,** born on 17th June 2016 (District of Birth: Chennai), residing at No. 1/115, Seethalakshmi Street, Gowrivakkam, Chennai-600 073, shall henceforth be known as **ALLEN THOMAS SELVARAJ.**
Chennai, 9th July 2024.
SELVARAJ A(Father)

NAME CHANGE

OLD NAME : MOHAMMED ADNAN HUSSAIN @ ADNAN HUSSAIN (Islam),S/o AKTHAR HUSSAIN, Date of Birth: 30/07/1992,residing at No. S1, 2nd Floor, Chandra Apartment, Race View Colony Main Road, 2nd St, Guindy, Chennai 600032,shall henceforth be known as NEW NAME : NIKHIL SINGH (Hindu).
OLD NAME : MOHAMMED ADNAN HUSSAIN @ ADNAN HUSSAIN (Islam)

CHANGE OF NAME

I, **M. MOHANDAS BALAJI** born on 05/05/1982 (Native district Madurai) Residing at B12, Breeze Avenue, Mahalakshmi Nagar 1st Main Road, Varadharajapuram, Chennai - 600048, Tamilnadu. Shall henceforth be known as **K. M. MOHANDAS BALAJI**
Chennai
04 September, 2026
M. MOHANDAS BALAJI.

ஞாயிற்றுக்கிழமைதோறும்
தினமணி
கதிர்
இளமை!
புதுமை!
இனிமை!